# கிறிஸ்துமஸ் நாள்

மாடியில் உலாவிக்கொண்டிருந்த கணவர் தடதடவென்று மாடியிறங்கி வந்து குடுகுடுவென்று வாசலுக்கு ஓடுவதை ஒரு நிமிஷம் நின்று கவனித்தாள் லக்ஷ்மி. வாசற்படிகளில் இறங்கிவிட்டார் - யாருடன் பேசுகிறார்?

சொந்த நன்மைக்காகவே ஏற்பட்ட பிரார்த்தனையும், பக்தியும், தெய்வத்தையும் திருப்தி செய்வது போல, இப்போது தானாக வந்த ரமணியின் ஓட்டமும் செய்தியும், லக்ஷ்மிக்குத் திருப்தியளித்துவிட்டன.

"அப்பா பாதரோடு பேசறார்ம்மா! என்று படபடத்துக் கொண்டு வந்து சொன்னான் ரமணி; அம்மா 'பாதரைப் 'பாதிரி' என்று திருத்திச் சொன்னதாலும், 'பாதர்' என்று சொல்லக்கூடாது என்று தடுத்ததாலும், அவள் பேச்சை ரஸிக்காமல், அங்கு இருக்க ஆவலில்லாமல் மீண்டும் வாசற்கு ஓடிவிட்டான்!

கொஞ்ச நாட்களாகப் பக்கத்துக் காம்பவுண்டுக்குள்ளிருந்த மாதா கோயிலில் கலகலப்பு ஏற்பட்டிருந்தது. ஓரிரண்டு நாட்களாக கிறிஸ்தவர்கள் இரு பாலாரின் நடமாட்டமும் பெருகியிருப்பதையும், புதுப்புது முகங்கள் தென்படுவதையும் கவனித்த சுந்தரம், "என்ன விசேஷமோ?" என்று சொல்லிக்கொண்டிருந்தா_ர்.

"இப்போ அதுபற்றி விசாரிக்கத்தான் அத்தனை பரபரப்பாக மாடியிறங்கி ஓடிப் போய் வாசலில் போகும் பாதிரியை வழிமறித்துப் பேசுகிறாரா!" என்று ஆச்சரியப்பட்டாள் லக்ஷ்மி.

"என்ன விசேஷமோ சர்ச்சிலே!" எனக்கேட்க நினைத்திருந்த அவள், கணவர் பிரித்த தபாலுடன் வருவதைப் பார்த்து,"என்ன விசேஷம் கடிதத்தில்?" என்று கேட்டாள். புனிதமான மாதா கோயிலை உச்சரிக்க வேண்டிய இடத்தில், குப்பைக் கூடைக்குப் போகும் கடிதத்தைப் பிரஸ்தாபித்தாளே? அதனால்தானோ ஏற்பட்டது மனச் சுணக்கம்? தெய்வம் தண்டித்துவிட்டதோ?

"லக்ஷ்மி! என்னுடைய பயத்தை நினைச்சால் வேடிக்கையாயிருக்கு எனக்கு!" என்று சிரித்தார் சுந்தரம்.

"பக்கத்துக் காம்பவுண்டுலே இருக்கிற சர்ச்சுலே என்ன நடக்கப் போகிறதோன்னு உங்களுக்கு அவ்வளவு அக்கரையும் கவலையுமாயிருந்தால், நாளைக்கு வீட்டுக்கே வரப்போகிற கிறிஸ்தவ விருந்தாளிகளுக்கு எப்படி நடக்கபோகிறதோ, என்னமாய் நடத்தப்போகிறேனோன்னு எனக்கு எவ்வளவு கவலை இருக்காது?" என்று சொன்னாள் லக்ஷ்மி, நெற்றி சுருங்க.

மனைவியின் கவலைச் சிறப்பினை உணர்ந்தார், ரசித்தார் சுந்தரம். எத்தனையோ பேர்களை அதிதிகளாகிக்கொண்டு, திறம்பட அவள் விருந்தோம்பியிருக்கிறாள். அவர்களின் மனதிருப்தியால் தானும் திருப்தியுற்றிருக்கிறாள். இப்போது, இந்த கிறிஸ்தவ விருந்தினருக்குக் குறையில்லாமல் விருந்து ஓம்பல் இயலுமோ என்பதே அவள் கவலை, பயம்.

மிஸ்டர் ஆடம்ஸும், அவர் குடும்பத்தினரும் தன் விருந்தாளிகள். மொத்தம் நபர்கள் ஐவர்தான். ஆனால் அவர்களுக்கு உகந்த அறுசுவை உண்டியை அவள் தயார் செய்ய முடியுமா? முடியாது!

முன்னர் ஒரு முறை மிஸ்டர் ஆடம்ஸ் மட்டும் விருந்தினராகக் கொண்டபோதே, "அவருக்குச் சரியில்லை நம் சாப்பாடும், அதிதி ஸத்காரமும்" என்று நினைத்திருந்தாள் அவள். இப்போது அவரும், அவர் குடும்பத்தினரும் வருகிறார்கள் என்பதால்,

காயம்பட்டுக்கொண்டு அழும் குழந்தைக்கு அதனாலேயே வசவும்கூட கிடைத்தாற்போலாச்சு லக்ஷ்மியின் வேதனை.

"இங்கே இறங்குவதில் அவர்களுக்கும்தான் என்ன சௌகரியம்? அப்போ அவர் சாப்பாட்டைக் கொறிச்ச கண்றாவியைத்தான் பார்த்தோமே! அவருக்கும் வயிறு நிரம்பல்லை! அரைகுறைச் சாப்பாடு என்று நமக்கும் வேதனை! இப்போதும் அதே வேதனை நமக்கு; அவர்களுக்கும் சுகமில்லாத போஜனம்! ஏன் இந்த அவஸ்தை! சிவனேன்னு அவாளும் சர்ச்சுலேயே இறங்கியிருக்கக்கூடாதோ!" என்பது லக்ஷ்மியின் கட்சி.

"சிவனேன்னு எப்படியிருப்பார் அவர், கிறிஸ்துவர்! அதான் இங்கேயே வந்திருக்கப்போறார்!" என்று இடக்காகப் பதில் சொல்லி லக்ஷ்மியை மடக்கினார் சுந்தரம். சரியான பேச்சோ, அசட்டுப் பேச்சோ அவர் பேசியது - நகைச்சுவையுள்ளதோ, நேர்மையுள்ளதோ அவர் கூறியது - ஆனால் அவருக்குத்தான் ஆதரவு கிடைத்தது; அவர் கட்சி வலுப்பெற்றது குழந்தைகளாலே.

பக்கத்திலுள்ள சர்ச்சில் இவ்வருஷம் விசேஷக் கொண்டாட்டம் என்று அவள் கண்டாள்.

"எப்படியும் வரவேண்டாம் எனப்போவதில்லை நாம். முடிந்ததைச் செய்வோம். ஒரு நாளைச் சமாளிப்போம். பழம், பிஸ்கட் வாங்கிப்போட்டு குறை வயிறுகளை நிரப்புவோம்! தீனிக்குறைதானா பொல்லாப்புக் கொணரும்? இன்முகமும், தயக்கமோ வேற்றுமையோ இல்லாத சகஜ உணர்ச்சியும், மற்ற குறைகளை மறக்கடிக்கும்!" என்று சமாதானங் கொண்டாள் லட்சுமி.

"லட்சுமி! நீயும் வாயேன்! பாரேன். சர்ச்சு அலங்காரத் தோரணைகளை!" எனக்கூவியழைத்தார் சுந்தரம். குழந்தைகள் நால்வரும், சுந்தரமும், மொட்டை மாடியிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள் மாதா கோயிலை. லக்ஷ்மியும் போனாள், கணவரின் அழைப்புக்கேட்டு.

'மிஸஸ் ஆடம்ஸ் எப்படிப்பட்டவள்?' என்ற கேள்வியும் கவலையும் எழுந்தது லக்ஷ்மிக்கு. 'இங்கே அகத்தில் இறங்க நம்பியவள் சகஜமான சுபாவமுள்ளவளாகவேயிருப்பாள்' என்ற சமாதானம், தினே தினே கிளம்பும் அரசியல் சமாதானங்களை ஒத்ததாகத்தான் இருந்தது. சமாதானங்களின் உண்மைச் சிறப்பும் தன்மையும் சிக்கல்களை நேரடியாகச் சந்திக்கும்போதுதானே வெளிப்படும்! எவ்வளவு சமாதானங்கள் செய்து கொண்டாலும் லக்ஷ்மியின் மனதுக்கு உண்மை சமாதானம் ஏற்படவில்லை. ஆனால் நல்லவேளை, பட்டே பட்டே அரசியல் சமாதானங்கள் எளிது காணாத வெற்றியை லக்ஷ்மி மறுநாள் கண்டாள்; மன நிம்மதியுற்றாள்.

வந்தாள் ஸ்ரீமதி ஐடா ஆடம்ஸ்.

நிதானமாக அமைந்த உருவத்தோற்றம். களை பொருந்திய முகம். சாவதானமான பார்வையுடைய கண்கள். வயதும் நடுத்தர வயதுதான், ஏறக்குறைய லக்ஷ்மியின் வயதையொத்தவள்தான். எளிமையும் இனிமையுமுள்ள உடை; தழையத் தழையப்புடவை; சொற்ப நகைகள். ஐடாவைப் பார்த்த லக்ஷ்மி, 'அனாவசியமாகக் கலங்கிக்கொண்டிருந்தோம்!' என்று சொல்லிக்கொண்டாள். நெற்றியில்பொட்டு இல்லாததும் ஓரிரண்டு நகைக் குறைவுகளும்தான் ஐடாவைக் கிறிஸ்தவப் பெண் என்று எடுத்துக்காட்டும்; மற்றபடி ஒரு புதுமையும் இல்லை,. பயம் வீணே என்று ஐடாவைப் பார்த்ததும் எண்ணியது அவள் மனம். ஆம் . . .மனம் வெறுப்புகளை விருப்புகளாகவும், தீமைகளை நன்மைகளாகவும் நொடியில் செய்யும் வல்லமையுள்ள மனம் அந்தப் பெண் மனம் எத்தகைய நுணுக்கங்களுடையது என்பதை அறிந்துணர்ந்து சுந்தரமும் வியந்தார்; பிரமித்தார் கொஞ்ச நேரங்கழித்து.

"என்ன, லக்ஷ்மி! . . . "சாப்பாடு திருப்தியாயிராதே அவர்களுக்கு' என்றுதான் உன் கவலை முக்கியமாய் இருந்ததல்லவோ? ஆனால் அவர்கள் "சர்ச்சில் தான் சாப்பிடணும்!" என்றபோது "இங்கே தான் சாப்பிடணும்!" என்ற ஒரே வற்புறுத்தலில் இறங்கிவிட்டாயே!"

என்றார் சுந்தரம் மனைவியிடம். விருந்தாளிகள் காலைப் பிரார்த்தனையையும் உணவையும் முடித்துக்கொண்டு வருவதற்குச் சர்ச்சுக்குப் போயிருந்தார்கள்.

"பின்னே, நம்ம வீட்டு விருந்தாளிகள்னு பேரு...... அங்கே சாப்பிடப் போகிறதாவது! எனக்கு அவமானமாயிருக்கு!" என்றாள் லக்ஷ்மி.

"அவர்தான் சொன்னாரே, சர்ச்சிலே 'இறங்க வேண்டியவர்கள்தான், ஆனால் மனைவிக்கு இங்கே இறங்க ஆசை! பூஜை, சாப்பாடு முதலானவற்றுக்கு சர்ச்சுக்குப் போகவேண்டியதுதான் தங்கள் கடமை!' என்று சொன்னாரே!" என்று கூறினார் சுந்தரம்.

லக்ஷ்மி ஒப்புக்கொண்டாள், ஐடாவும் அதேபோல் தன்னிடம் கூறியதாக, அவர்களின் காலனியில் எல்லோரும் கிறிஸ்தவர்கள் என்பதால் ஹிந்துக்களுடனும் தங்கிப் பழக வேண்டும் என்று ஐடா விரும்பி இங்கே வந்திருப்பதைப் புகழ்ந்தாள். "டிபனாவது இங்கே சாப்பிடாவிட்டால் விடுவேனா நான் அவர்களை!" என்றாள்.

"மனமாற்றம்னு கதைகளில் வருகிறதுபோல் நடக்கிறதா?" என்று முறுவலித்தார் சுந்தரம்

"எனக்கென்ன துவேஷமா, கோபமா, மாறுகிறதற்கு! கவலையாயிருந்தது கொஞ்சம், அது போய்விட்டது, அவ்வளவு தானே! மனமாற்றமென்ன?" என்று அவரைக் கேட்டாள் லக்ஷ்மி.

"ஓஹோ, சரி! .லக்ஷ்மி.... டிபனோடு 'ப்ரூட்ஸாலட்' பண்ணிவிடேன்!" என்றார் சுந்தரம் சிரித்தவாறு.

"ஒரே பழத்தில் எல்லாப் பழங்களின் வாசனையையும் புகுத்திக் கொடுக்க முடியுமா? எல்லாப் பழதினுசுகளும் நிறையாதான் வாங்கமுடியுமா? இதோ 'ப்ரூட்ஸாலட்' தான் பண்ண முடியும்!" என்று லக்ஷ்மி செய்து கொடுத்ததை உட்கொள்ளும் சமயத்தில், 'மனமாற்றம்' பற்றி அவள் போட்ட போடு இன்னது என்பதை ஆடம்ஸுக்குக் கூற விரும்புவதாகச் சொன்னார் சுந்தரம்.

"அழகுதான்! . . நான் சொன்னதையொன்றையும் அவரண்டை சொல்ல வேண்டாம்! . . .சொன்னால் ரொம்ப இங்கிதமாய் மரியாதையாய் இருக்குமே!" என்று கடிந்தாள் லக்ஷ்மி.

"எல்லா மதங்களோட நல்ல அம்சங்களையும் சேர்த்துண்டு கலந்துண்டால் 'ப்ரூட்' ஸாலட் மாதிரியிருக்கும் காலம்னு ஏதாவது பொதுவாய்ச் சொல்லிவிட்டுப் போங்களேன்! இரண்டு மதக்காரர்கள் பேசறது இந்த ரீதியில் இருக்க வேண்டாமோ - அதுவும் இந்தக் காலத்துப் போக்குக்கு! நான் 'ப்ருட் ஸாலட்' பண்ணித் தந்துடறேன்; என்னை மட்டும் இழுக்க வேண்டாம் பேச்சில்! ஆமாம்! அவர்கிட்ட எதையாவது என்னைப் பற்றி பீற்றிக்கப் போறேள், வெட்கக்கேடு! . . . அவர் பெண்டாட்டியைப் பற்றி ஒரு துரும்பு சொல்லிக்கிறதாகத் தெரியவில்லை!" என்றாள் லக்ஷ்மி.

முற்பகல் முடியும் சமயம் மாதா கோயிலிலிருந்து திரும்பி வந்தனர் ஆடம்ஸ் குடும்பத்தினர். நெடுநாள் பிரிந்த நெருங்கிய நண்பர்களை வரவேற்று அளவளாவுவது போல அவர்களை அணுகிப் பழக ஆரம்பித்துவிட்டார்கள் சுந்தரம் வீட்டார்.

மிஸ்டர் ஆடம்ஸ் மட்டும் இளைப்பாகப் படுத்தார். சுந்தரத்தின் பெண் இந்திரா தன் வயதையொத்த கிரேஸுடன் வெகு மும்முரமாகப் பேச்சில் லயித்தாள். ரமணியும் உமாவும் ஆடம்ஸின் பிள்ளை மைகேலுடன் மூன்று சக்கர சைக்கிளையும் மரக் குதிரையையும் வைத்துக்கொண்டுபொழுது போக்கினார்கள். ஆடம்ஸின் மூன்று வயதுக் குழந்தை அம்மாவின் பக்கத்தில் படுத்து உறங்கியது. லக்ஷமியின் இரண்டரை வயதுக் குழந்தை தொட்டிலில் துயன்றது.

"அம்மா கிட்டத்தான் தூங்கணுமாமோ?" என்றாள் லக்ஷ்மி, ஆடம்ஸின் குழந்தையைச் செல்லமாகப் பார்த்துக்கொண்டே. "பாருங்களேன் . . . என்னண்டை வரமாட்டாளாம்!" என்று கொஞ்சினாள்.

மென்சிரிப்பு பூத்தாள் ஐடா. "இவளும் தொட்டிலில் தூங்கினால்தான் உங்களுக்கு மனசு சமாதானம் ஆகும்னு எனக்குத் தெரிகிறது! அதுக்கு என்ன கவலை?" என்றாள்.

எல்லா மதத்தினரும், சகலரும் ஒரு நிலையிலேயே ஏற்றத் தாழ்வு இல்லாமல் இருப்பதுதான் கடவுளுக்குச் சம்மதம்? ஆனால் அது எங்கே நடக்கிறது உலகில்? புது இடம், வேற்று மனிதர்கள் என்று அந்தக் குழந்தை அம்மாவிடமே படுத்துறங்கியது. தொட்டிலில் படுக்க இசையவில்லை. ஆனால், இந்தக் குழந்தைமூலம் ஐடாவும் லக்ஷ்மியும் மகத்தானதொரு நட்பின் பிணைப்புக்குட்பட்டுவிட்டார்கள். உலகின் பற்பல உயர்வுத் தாழ்வுகளால்தானே பக்திப் பிணைப்பு ஏற்படுகிறது? லக்ஷ்மியும் ஐடாவும் குழந்தைகளைவிட அதிக நட்புரிமையுடனும் லளிதத்துடனும் பழக ஆரம்பித்துவிட்டார்கள்.

அம்மாவை நோக்கி ஓடி வந்தாள் கிரேஸ். "அம்மா அம்மா! இந்திரா ஒரு விஷயம் சொன்னாள் கேளேன்! இப்போ எலிஜபெத் ராஜகுமாரிக்குக் குழந்தை பிறந்திருக்கே! அது யாராம் தெரியுமா? காந்திஜியாம்! "இந்தியா தேசம் என்னுடையதாக்கும்!"னு சொல்லி மறுபடியும் இங்கிலீஷ்காரர்களுக்கே இந்தியா கிடைக்கும்படி பண்ணிட போறாராம்!" என்றாள் தாயிடம். இதற்குள் கிரேஸைத் தொடர்ந்து வந்த இந்திரா பெரியவர்கள் இருவரும் வேடிக்கையாக விழிப்பதைக் கண்டு "எங்கள் பள்ளிக்கூடத்தில் தான் சொல்லிக் கொண்டார்கள்! . . . என்னமோ கணக்குப் போட்டுப் பார்த்தார்கள்!" என்று குழறினாள்.

"என்னடி கணக்கு! ஜோஸ்யக் கணக்கு ரொம்பத் துள்றதோ அவா மூளையில்!" என்று சிரிப்பை அடக்கிக் கோபம் தொனிக்கக் கேட்டாள் லக்ஷ்மி.

"என்னமோ? வாத்தியாரம்மாக்கள்தான் 'காந்திஜி செத்துப் போனதும் இந்த ராஜகுமாரி எலிஜபெத் வயிற்றில் குழந்தையாய்ப் போய்விட்டார், அவர் செத்துப்போனதுக்கும் இந்தக் குழந்தைப் பிறந்ததுக்கும் சரியாயிருக்கு!' என்று சொல்லிக்கொண்டார்கள்".

தயங்கித் தயங்கி பேச்சை முடித்தாள் இந்திரா.

"நாங்கள்ளாம் உங்கள் சமர்த்தான வாத்தியாராம்மாகள் இல்லே! நீ மென்று முழுங்க வேண்டாம். பதில் சொல்ல!.... என்னமோ காந்திஜியைப் பற்றி நல்லதாப் பேசாமல் கண்டபடி பேசறதாமே.... பார்த்தீர்களோல்லியோ பள்ளிக்கூடத்தோட லட்சணத்தை!" என்று கோபமும் சிரிப்புமாக பெண்ணையும் ஐடாவையும் மாறி மாறிப் பார்த்துச் சொன்னாள் லக்ஷ்மி.

"நமக்குக் கிடைத்த சுதந்திரம் நிலைக்குமான்னு சந்தேகப்படுகிற நிலையிலே இருக்கோல்லியோ நாடு? மறுபடியும் பிரிட்டிஷார் கைக்குப் போய்விடும் என்று பயப்படுகிறதுக்கும், இப்போ பிறந்திருக்கும் ராஜகுமாரன் காந்திஜிதான், மறுபடியும் இந்தியாவை உரிமையாக்கிக்கொள்வார் என்றும் எவ்வளவு பொருத்தமா ஜோடித்திருக்கிறார்கள்.... பாருங்களேன்!. பள்ளிக்கூடங்களில்தான் தினுசு தினுசான பேச்சுக்கள் கிளம்பும்!" என்றாள் ஐடா, இந்திராவின் குன்றிப்போன உற்சாக மனம் மீள வேண்டுமென்று.

"நிஜந்தான்! இந்தக் கற்பனையெல்லாம் என்ன அதிசயமாயிருக்கு! இன்னொரு அதிசயம் பாருங்கோ, ஐடா! காந்திஜி போய் எத்தனை மாசமாகிறது, நவம்பரில் ராஜகுமாரன் பிறந்த சமயத்துக்கு! சரியாக யோசனை, கற்பனை, தட்டியிருக்கே!" என்றாள் லக்ஷ்மி ஆச்சரியமுடன்.

விரல் விட்டு எண்ணினாள் "ஐடா. "ஓ! ஆமாம்! . . . " என்றாள்.

"நல்ல யோசனைக்காரிகள் வாத்தியாரம்மாக்கள்! நம் இந்த பன்னெண்டு வயசுப் பொண்ணு அரைகுறையாப் புரிஞ்சிண்டு நமக்குச் சொல்றதுக்குள்ளே தடுமாறினது...." சிரித்தாள் லக்ஷ்மி.

"பாவம், அவளுக்கு பின்னே எப்படி சொல்லத் தெரியும்?." என்றாள் ஐடா. சிரிப்பை நிறுத்தினாள் லக்ஷ்மி.

"நமக்கும் வேடிக்கையான பேச்சுத்தான் இது! ஆனால் காந்திஜியைப் பற்றிப் பேசுகிறதாவது இப்படின்னுதான் எனக்கு முதலில் கோபம்! காந்திஜி கடவுளாகிவிட்டார்னு நினைக்காமல், 'மறுபடியும் பிறப்பார், இந்தியாவுக்கு எதிரியே ஆகிவிடுவார்'... என்றெல்லாம் தோணலாமா? பேசலாமா?"

இந்திரா விசுக்கென நகர்ந்து கொண்டாள். "வாங்கோ, கிரேஸ்! ஏதோ வேடிக்கையாய் நடந்த பேச்சு பிரமாதமாப் போச்சு இவளுக்கு! காந்தி பக்தி இவளுக்குத்தான் போலிருக்கு!" என்றாள்; அங்கிருந்து கிரேஸுடன் மறைந்தாள். பிற மதங்களில் உயர்வு இல்லை, பெருமையில்லை, தெய்வம் இல்லை என்று நினைப்பது எத்தகைய மதியீனமோ, அப்படிப்பட்டதாக, லக்ஷ்மியின் பேச்சு, இந்திராவுக்குத் தொனித்தது.

."உம்! கோபம் வராதா? அவளோட அப்பாவானால் காந்திஜி கடவுளாகிவிட்டார்னு படத்திற்கு மாலை போட்டுக் கும்பிடுகிறார். தன் பெண், காந்திக்குப் பிறவியுண்டுன்னு சொல்கிறாள் என்றால் . . ."

ஐடா குறுக்கிட்டாள் லட்சிமியின் பேச்சில் "ஏன் அப்படியானால் காந்திஜிக்கு மட்டும்தான் பிறவி கிடையாதா? இறந்தவர்கள் மற்றவர்களுக்கு உண்டா?" என வினவினாள்.

"ஏன் கிடையாது! ஜனன மரணச் சக்கரம் சுழல்றதே, மற்ற பேருக்கு! யாரோ மகாத்மாக்களுக்குத்தான் பிறவி கிடையாது! பிறவிகள் கூடாது, மோக்ஷம் வேண்டுமென்றுதானே பகவானைப் பிரார்த்திக்கணும்! பிறவிகள் இல்லையோ....."

"என்ன, அப்படியா சாஸ்திரம் சொல்கிறது?"

"ஆமாம்! இல்லையோ பின்னே?"

"எங்கள் வேதத்திலே அப்படிக் கிடையாது. இறந்தவர்கள் எல்லோரும் ஆண்டவனிடத்தில் இருந்து விடுவதாகத்தான் சொல்கிறது! ஒருவன் ஒரு தடவைதான் பிறக்கிறான். இறந்ததும் ஏசுவிடம் சேர்ந்துவிடுகிறான்!"

"அப்படியா உங்கள் சாஸ்திரம் சொல்கிறது?"

"ஆமாம்"

"எப்படியிருந்தாலும் சாஸ்திரம் மனதைப் பரிசுத்தப்படுத்தத்தான் என்பது தெரிகிறது. கடவுளிடமே இருக்கிறது போன உயிர், என்றால் ஒரு ஆறுதல்! திரும்பவும் வேறு இடத்தில் பிறந்திருக்கிறது அந்த உயிர், பூலோகத்துக்கு வந்துவிட்டது, வேறொருவரிடம் வளருகிறது என்றாலும் ஒரு திருப்தி, சாந்தி இல்லையா?"

"ஆமாம்."

"எங்கள் வீட்டில் மாடு கன்று போட்டது. அதற்கு முதல்நாள் மாடு கறப்பவனின் குழந்தை போய்விட்டது. "உன் குழந்தை தான் இங்கு வந்திருக்கப்பா! கவலைப்படாதே!" என்று சொன்னோம். மறுநாளே அவன் பெண்டாட்டி வந்தாள். கன்றுக்குட்டியைக் கொஞ்சி முத்தமிட்டுவிட்டுப் போனாள்.

ஐடாவின் முகம் 'என்னமோ போல்' இருப்பதாகத் தோன்றியது லக்ஷ்மிக்கு. "எப்படியோ சோர்வாயிருக்கிறீர்களே, ஐடா! சற்றுப் படுங்கள்!" என்று கனிவுடன் கூறினாள் லக்ஷ்மி.

பம்பு அடித்தாற்போல ஐடாவின் கண்களில் நீர் சுழன்றது. பொட்டென்று ஒரு நீர்த்துளி விழுந்தது உருண்டு.

"ஏனம்மா"

கண்களைத் துடைத்துக்கொண்டாள் ஐடா. "எனக்கு ஒரு பிள்ளை போய்விட்டான் போனவருஷம். அவனை தேவதூதனாகக் கனவுகளில் காண்கிறார்களாம் அவரும் குழந்தைகளும். எதிரில் பேசுவது போல பல பேசுகிறானாம், எல்லாம் சொல்கிறார்கள் பாடம் ஒப்புவிப்பதுபோல. எனக்கும் எப்போதாவது கனவில் வருவானோ என்று பார்க்கிறேன்! ஒரு தடவை கூட வந்ததில்லை! " என்று கூறி பொலபொலவென கண்ணீர் உகுத்தாள் ஐடா.

"ஐடா! நான் சொல்கிறேன் காரணம்! உங்களுக்குக் கனவில் வராத பையன் உங்கள் வயிற்றிலேயே இருக்கிறான்! வருத்தப்பட வேண்டாம்." என்று சட்டென பதிலளித்தாள் லக்ஷ்மி.

ஏறிட்டு லக்ஷ்மியைப் பார்த்தாள் ஐடா. பனித்துளி படர்ந்த மலர் போலஎக்களிப்பு எட்டிப்பார்த்தது அவளுடைய ஈரக்கண்களிலே. மகிழ்ச்சியோ, ஆறுதலோ, வெட்கமோ எதையோ ருசுபித்தது அவளுடைய முகத்தில் அரும்பிய புன்னகை.

'அதே பிரசாந்தமான முகம்தான்!' என்று லக்ஷ்மியை நினைக்கச் செய்தது அன்றுமாலை ஊர்வலம் வந்த அன்னை மேரியின் தோற்றம். உடல் நிற வித்தியாசமும், உடையின் பாணியும், 'வேற்றுமை'களாகத் தோன்றவில்லை, அவளுக்கு. அவளுக்கு ஆச்சரியம் அளித்தது மேரியின் உருவச்சிலையின் தோற்றச் சிறப்புத்தான்.

'இவ்வளவு அழகான உருவத்தைப் பார்த்தாலே பக்தி பிறக்கிறதே! தெய்வத்தையே பார்ப்பது போல மனதில் பரவசம் எழுகிறதே!' என்று நினைத்தாள். 'வெளேர்' என்றிருந்த மேரியின் சிலையும், அருள் சுரக்கும் பார்வையும் கண்டு சொக்கிப் போனாள்.

"என்ன! கிறிஸ்துவைக் காணோமே? கிறிஸ்து விக்கிரகம் இருக்கும் என்றல்லவோ எதிர்பார்த்தேன்?" என்று தன் சந்தேகத்தை வெளியிட்டாள் லக்ஷ்மி, கணவரிடம்.

உயரமான மேடைபோல் ரதம். விமானம் போன்ற அமைப்பு இல்லாதது. நடுவில் மேரியாள் உருவம். ஆள் உயரச் சிலை . வெண்மையானது. நாலு மூலைகளிலும், இறக்கைகளை வைத்துக் கொண்டு பறக்கும் நிலையில் நான்கு குழந்தைகளின் உருவச் சிலைகள். அவையும் வெண்மையானவை. குழந்தைகளின் கைகளில் பூமாலைகள்; ரதத்திற்கும் அங்காங்கு பூமாலைகள். இவ்வளவேதான் அலங்காரம் - ஆனால் அதன் அழகு வர்ணனைக்கு அடங்காது.

மேரியாளின் எழிலுருவம் நின்றிருந்த இடத்தில், ஏசுவின் உருவம் நின்றிருந்தால் இத்தகைய உவகைப் பெருக்கு ஏற்பட்டிராது என்றே தோன்றியது லக்ஷ்மிக்கு. எனினும், சந்தேகம் தீர வேண்டாமா? கேட்டாள், "ஏசு எங்கே!" என்று.

"கிறிஸ்து இனிமேல்தான் பிறக்கப்போகிறார்! கிறிஸ்துமஸ் வரப்போகிறது! இப்போது சீமந்தம் போன்றதொரு சடங்கு இது . . . மேரிக்கு நடத்துகிறார்கள்." என விளக்கினார் சுந்தரம்.

'இந்தச் சர்ச்சுக்குத்தான் மாதாகோயில் என்னும் பெயர் ரொம்பப் பொருந்தும். கிறிஸ்துவர்களிலேயே கிறிஸ்துவைப் பூஜை செய்பவர்கள் சிலர்; கிறிஸ்துவை உலகுக்கு ஈந்த மேரியைப் பூஜிப்பவர்கள் சிலர். பக்கத்துச் சர்ச்சுக்காரர்களுக்கு மேரி முக்கியமானவள்' என்றும் தெரிந்து கொண்டாள் லக்ஷ்மி, பேச்சுப் போக்கிலே.

அதற்குமேல் கேள்விகள் கேட்கவோ பேசவோ நிலைமை சரி இல்லை. மேரியாளை பவனி அழைத்துச் செல்லும் ரதத்திற்கு இருமருங்கும் வரிசையாக, ஒழுங்காக, நிதானமான நடந்து போய்க்கொண்டிருந்தார்கள், கிறிஸ்தவர்கள் இருபாலாரும்; குழந்தைகள் ரதத்திற்கு முன்னே சென்றார்கள். வலது கை மெழுகுவர்த்தி விளக்குகளைப் பிடித்திருக்க, இடது கையில் இருக்கும் காகிதத்தில் எழுதியிருக்கும் பாட்டின் அடிகளைப் பார்த்துப் படித்துக்கொண்டே, மென்குரலில் பாடிக்கொண்டே, ஒவ்வொருவரும் நடந்து சென்ற காட்சியைக் கண்கொட்டாமல் கவனித்துக் கொண்டிருந்தார்கள் சுந்தரம் குடும்பத்தார். ஆடம்ஸும், ஐடாவும் குழந்தைகளும்கூட அந்தக் கூட்டத்தினிடையே அதே ஒழுங்குடன் போவதைப் பார்த்து, மெல்ல ஒருவருக்கொருவர் சுட்டிக் காட்டிக்கொண்டார்கள் இந்திராவும் ரமணியும். ஊர்வலத்தின் பிரசாந்தமும், நிசப்தமும், இவர்களின் ஓங்கிய குரல்களைத் தணித்துவிட்டது! லக்ஷ்மி எப்படிப் பேசுவாள், ஏன் பேசுவாள்?

எத்தனை தினுசு ஆடையலங்காரங்கள் செய்துகொண்டிருந்தாலும், எப்பேர்ப்பட்ட மனப்போக்குடையவர்களானாலும், தெய்வத்தின் சந்நிதி என்னும் நினைப்பால் ஏனையோர் முகங்களும் ஒரே உணர்ச்சி காட்டுபவனாய் சலனமற்று இருந்ததை நினைக்க, மாபெரும் அதிசயமாக இருந்தது லக்ஷ்மிக்கு.

'மாதா கோயிலிலிருந்து திரும்பி வந்த ஆடம்ஸ் குடும்பத்தாரை அன்றிரவு விடைகொடுத்து அனுப்ப தன் மனசு ஒப்பாது போலிருக்கு,' என்றும் உணர்ந்தபோது

அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால் 'நல்லுணர்ச்சி' பின் சந்நிதியில் வேறு புல்லுருவி உணர்ச்சிகளும் புனிதம் ஆகும் என்பதை அறியாதவளா லக்ஷ்மி? மனசில்லாது ஐடாவை விடை கொடுத்து அனுப்பும்படி எந்த உள்ளுணர்ச்சி மாயம் செய்துவிட்டது என்பதை அவள் அறிவாள். அதனாலேயே மனங் கலங்காமல் இருந்தாள், ஐடா விடை பெற முன் வந்தபோது.

"நான் சொன்னது நினைவிருக்கட்டும் ஐடா. கவலைகள் வைத்துக் கொள்ளக்கூடாது நீங்கள். என்ன?" என்று கேட்டாள் லக்ஷ்மி.

"ஆகட்டும், மிஸ்ஸஸ் சுந்தரம்! ஆனால் எனக்கொரு யோசனை! என் பிள்ளை உங்கள் வயிற்றில் பிறக்குமானால் இன்னும் சீக்கிரம் பார்ப்பேனே என்று ஆசைப்படுகிறேன்!" என்றாள் ஐடா. இப்போது அவள் முகத்தில் குறும்பும் இருந்தது!

திடுக்கிட்டுத்தான் போனாள் லக்ஷ்மி. "போகிறது! அப்படியேதான் இருக்கட்டுமே! சமாசாரம் தெரிந்ததும் ஆஸ்பத்திரிக்கே என்னைப் பார்க்க வருவேள் இல்லையா? மறுபடியும் பார்ப்போம் அடிக்கடி என்று எனக்கு ரொம்பவும் சந்தோஷம்தான்!" என்று பதிலிறுத்தாள் லக்ஷ்மி.

"இனி எப்படியும் நம் நட்பு வலிவு பெறும்!" என்னும் ஆறுதலுடனும் தாபத்துடனும் தோழமையுடனும் லக்ஷ்மியும் ஐடாவும் விடைபெற்று பிரிந்தார்கள்.

அவர்கள் போனபின் லக்ஷ்மி சொன்னாள் கணவரிடம். "என்ன இருந்தாலும் மனசு என்கிறது ஒன்றுதான், யாருக்கும்-கிறிஸ்தவர்களாவது, இந்துக்களாவது! வாசலில் ஆடம்ஸும் பாதிரியும் பேசிக்கொண்டிருந்தார்கள். இரண்டு பாதர்கள்!' என்று இங்கிலீஷில் முழக்கினான் மைக்கேல். என்ன தீவிரமாக அவனைக் கடிந்து கொண்டாள் ஐடா!"என்று உதாரணங்களுடன் ஆடம்ஸின் மனைவியைப் புகழ்ந்தாள் லக்ஷ்மி. நேற்று மிஸஸ் ஆடம்ஸ் எப்படிப்பட்டவளோ என்று வாய்க்குவாய்ச் சொல்லிக்கொண்டிருந்த அதே லக்ஷ்மி!

"லக்ஷ்மி! . . .என்ன மாயமோம்மா! நீ அவளைப் புகழ்ந்தால், அவர்கள் இருவரும் உன்னைப் புகழ்ந்து தள்ளுகிறார்கள் கடிதத்தில்!" என்று மொழிந்தவாறே கடிதத்தைக் கொணர்ந்தார் சுந்தரம்.

"என் மனைவியின் மனதிலிருந்த ஒரு பெருங்குறை தீர்ந்துவிட்டது, தங்கள் மனைவியின் சிறந்த தோழமையினால்," என்று மிஸ்டர் ஆடம்ஸ் எழுதியிருந்தார்.

"நானாவிதச் சொற்களும் அவற்றின் நானாவித ரூபங்களையும் பற்பல தினுசாகச் சொல்லுவது அகராதி. நமக்கு ஒரு சொல் விஷயமாக சந்தேகமோ, தேவையோ, குறையோ, அதிருப்தியோ இருந்தால் அகராதியை நாடுகிறோம். அதன் உதவியால் - அதன் உறவால் - நம் தேவை பூர்த்தியாகிறது. மனம் திருப்தியடைகிறது; குறை நீங்கி மன நிறைவு ஏற்படுகிறது. அதுபோலவே பிற மதத்தினரின் உறவும், பலமதக் கொள்கைகளின் உதவியும் நம் மனத்தத்துவத் தேவைகளையும் குறைகளையும் நிறைவுபடுத்துகிறது என்பதை நான் உணருகிறேன். என் மனைவி, ஸ்ரீமதி சுந்தரம் அளித்திருக்கும் மன நிறைவை என்றும் மறவாள்".

இதுதான் மிஸ்டர் ஆடம்ஸ் எழுதிய கடிதத்தின் சாராம்சம். "என்னடியம்மா, என்ன மனநிறைவு அளித்தாயாம் நீ ஐடாவுக்கு!" என்று கேட்டார் சுந்தரம். அவருக்குப் பெண்களின் பேச்சின் சாராம்சம் என்னமாய்த் தெரியும்? லக்ஷ்மி சொன்னாள் விவரம்.

'பாவம்! . . .அந்தப் பெண்ணின் மனக்குறை தீரவேண்டியதுதான்! யார் மனதில் இருந்தாலும் இருக்காவிட்டாலும் போன பையன் தாயின் மனதில் இருந்து கொண்டுதான் இருப்பான்! எனினும் அவள் குறைப்பட்டாள், கனவில் காணவில்லையென்று! லக்ஷ்மி சொல்லியிருக்கும் சமாதானம் உண்மையான ஆறுதல்தான்! ஹிந்து மதக்கொள்கை, இந்த மறு பிறவிக் கொள்கை, அந்தக் கிறுஸ்தவப் பெண்ணுக்கு ஆறுதளிப்பது வரவேற்கத்தக்க அம்சம்தான்!' என நினைத்துக் கொண்டார் சுந்தரம்.

'ஊருக்குப் போனதும், நன்றி கூறும் கடிதம் எழுத வேண்டுமென்ற கடமையுணர்ச்சியால் அவர் எழுதியிருக்கிறார்!' என்று அவரும் எண்ணவில்லை, லக்ஷ்மியும் நினைக்கவில்லை. அவர்கள் ஊருக்குப் புறப்பட்டுப் போகும் போதே மனமார்ந்த நன்றி மொழிகள் கூறிவிட்டுத்தான் போயிருந்தார்கள், "கர்ப்பிணியான மேரிக்கு அவளுடைய உருவச் சிலைக்கு, இவ்வளவு அருமை பெருமையாக, ஆடம்பரமாக பூஜைகள், ஸ்தோத்திரங்கள் செய்தோம் . . . ஆனால் அதே சமயம் பூரண கர்ப்பிணியான மிஸ்ஸஸ் சுந்தரத்திற்குத் தொல்லைகள் கொடுத்தோம்!" என்று பலுகி பலுகி நன்றி கூறிவிட்டுத்தான் அவர்கள் சென்றார்கள். அன்று முடித்துக்கொண்ட கடமைக்கும் மேலான அன்புச் சின்னமாகத் தான் இந்தக் கடிதம் வந்துள்ளது என்று சுந்தரம் தம்பதிகள் நினைத்தார்கள்.

"அவர்களுக்கு நீங்கள் என்ன எழுதப்போகிறீர்கள்?" என்று கேட்டாள் லக்ஷ்மி.

"இப்போது சங்கதி எதுவுமில்லையே, எழுதுவதற்கு! இருக்கட்டும், கிறிஸ்துமஸ் வாழ்த்துக் கூறி எழுதிவிடுகிறேன் அடுத்த வாரம்! உடனே கடிதம் போடணுமென்றால் . . . இப்போதே போட்டுவிடுகிறேன்; வாழ்த்துக் கூறிவிடுகிறேன்!" என்றார் சுந்தரம்.

"வேண்டாம், இப்போதே கிறிஸ்துமஸ் வாழ்த்து அனுப்பினால் பொருத்தமாயிராது! அடுத்த வாரமே எழுதுங்கள்!" என்றாள் லக்ஷ்மி.

அடுத்த வாரம், சொன்னபடியே கடிதம் எழுதிப் போட்டார் சுந்தரம். ஆனால் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள் மட்டும் எழுதிக் கடிதத்தை முடித்துவிடவில்லை அவர். வேறொரு முக்கியமான செய்தியும் இருந்தது எழுதுவதற்கு.

"என்ன எழுதியிருக்கிறீர்கள்?" என்று கேட்டாள் லக்ஷ்மி. அவளுடைய சோர்ந்த முகத்திலும் புன்சிரிப்புப் பிறந்தது.

"பிறந்திருக்கிறானே பயல் - 'அவனைக் கட்டாயம் வந்து பார்க்கணும் நீங்கள்!' என்றுதான் வேறென்ன? ஐடா, ஆடம்ஸ் சொன்ன மாதிரி அவர்களோட பிள்ளைதான்னு நினைச்சு வந்தாலும் சரி, இல்லை நர்ஸ் சொன்ன மாதிரி 'ஜீஸஸ்'னு நினைச்சு வந்தாலும் சரி, 'கட்டாயம் வர வேண்டியது அவசியம்'னு எழுதிவிட்டேன்!" என்றார் சுந்தரம்.

"சரி - ஆனால் - அவர்களுடைய அகராதி உபமானத்துக்கும் நன்றி கூறி எழுதணும் என்று சொன்னீர்களே - எழுதவில்லையா?" என வினவினாள் லக்ஷ்மி.

"அவர்கள் வந்தால் நேரில் சொல்ல ஒரு முக்கியமான விஷயம் இருப்பதாக மட்டும் குட்டாக எழுதியிருக்கிறேன்! அப்போதுதான் அவர்களுக்கு வரணுமென்ற ஆதுரம் இருக்கும்!" என்றார் சுந்தரம்.

சிரித்தாள் லக்ஷ்மி, மெல்ல.

குழந்தை பிறந்ததும், "ஒரு பெண், நாலு பிள்ளையா மொத்தம்! இது பெண்ணாய்ப் பிறந்திருக்கக்கூடாதோ!" என்று வருத்தப்படுவது போல சொன்னார் அவர். ஆனால் நர்ஸ், "இன்று ஜீஸஸ் பிறந்த நாள்!" என்று சொன்னதைக் கேட்டதும் அகம் மலர, முகம் மலர அவர் "அப்படியா பேஷ்!" என்று துள்ளியதைப் பார்த்தாள் லக்ஷ்மி.

'நமக்கு கிறிஸ்துமஸ் பண்டிகை கிடையாது, நமக்குத் தோன்றவில்லை இந்த விஷயம்! இப்போ நமக்கும்தான் எத்தனை சந்தோஷம், கிறிஸ்து பிறந்த நாளில் குழந்தை பிறந்திருக்கிறான் என்று!' என எண்ணினாள் லக்ஷ்மி; சொன்னாள்.

சுந்தரத்திற்கு அகராதி உபமானம் நினைவுக்கு வந்தது. "எழுதிவிடப்போகிறேன் என் நன்றியை!" என்று துள்ளினார்.

ஆனால், அவர் எழுதவில்லை! நேரில் அந்தக் கிறிஸ்தவ நண்பர்கள் வரணுமென்று எத்துப் பண்ணியிருக்கிறார். லக்ஷ்மியும் கணவரின் எண்ணத்தை ஆமோதித்து ஒத்துழைத்தாள்.

ஆனால் இவர்களுக்கும் மேலான எத்துப்பண்ணி, கிறிஸ்தவ நண்பர்களின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள், இந்திரா. "காந்திஜி மறுபடியும் பிறந்திருக்கிறார் என்று சொன்னதற்கு சண்டை பிடித்தீர்களே என்னை! இப்போது கிறிஸ்துதான் பிறந்திருக்கிறார் என்று பெருமைப்படுகிறீர்களே! இது நியாயமோ!" என்று கேட்கணும், அம்மாவை, அவர்கள்முன் மடக்கணும் என்று நினைக்கிறாள்! ஆனால் அகராதி உபமானம் இந்திராவையும் ஆட்கொண்டுவிடத்தான் போகிறது!

தம்பி கிறிஸ்துமஸ் நாளில் பிறந்தது அவளுக்கும் உள்ளூற உவகைதானே!

**********

(சுதேசமித்திரன், ஜனவரி 2, 1949)